இதனைப்பற்றி என்ன? ....

# பீடத்தின் திருவருட்சாதனம்

பூமிக்குரிய எமது வாழ்வினூடாக பரலோகத்துக்குச் செல்லும் எமது பயணத்திலே எமது நல்ல கிருபைமிக்க தேவன் பரிசுத்தமும் பெறுமதிமிக்கதுமான ஒரு உணவை, எமது யாத்திரையிலே எம்மைத் தக்கவைத்து வலிவூட்டும்படியாக வழங்கியிருக்கிறார் – கர்த்தரின் பந்தி. இந்த வல்லமைமிக்க ஆறுதற்படுத்தும் கொடையைப் பெறுவதென்பது எமக்கு என்னே பாக்கியம்! பீடத்தின் இந்த திருவருட்சாதனத்துக்காக தேவனுக்கு என்றென்றைக்கும் நன்றியும் துதியும் செலுத்துகிறோம்.

*பாதை காட்டும் மாயெகோவா (மா இரட்சகா), பரதேசியான நான், பலவீனன் அறிவீனன், இவ்வுலகம் காடுதான். வானாகாரம் வானாகாரம் தந்து என்னைப் போஷியும்.* [1]

## கர்த்தரின் பந்தி எமக்கு ஏன் தேவை?

எமது வாழ்க்கைகளை தேவனுடைய பரிசுத்தம் எனும் பிரகாசமான வெளிச்சத்திலே நாம் சோதிக்கும்போது, நாம் எவ்வளவாகப் பாவம் செய்தோம் என்பதையும் எவ்வளவாக அவரது மன்னிப்புத் தேவை என்பதையும் உணர்கிறோம். வீழ்ந்துபட்டுள்ள இந்த உலகிலே எமது பாவநிலை, மற்றும் எமது வாழ்வின் துன்பங்கள், துயரங்கள், கஷ்டங்கள் மற்றும் அழுத்தங்கள் ஆகியவைகள் அனைத்துமே எமக்குக் கர்த்தருடைய பந்தி அவசியம் என்பதற்கான காரணிகளாகும்.

எமது தேவை எவ்வளவு பெரிதாக உள்ளதோ அவ்வளவு பெரிதானது அவர் வழக்கியுள்ள ஆகாரம்! எம்மை இரட்சிக்கும்படியாக தேவன் செயற்படும் மிகவும் தனிப்பட்ட வழிமுறையான அது எம்மை வலுவூட்டவதற்கும் அவருக்கு நெருக்கமாக எம்மை வைத்திருப்பதற்குமாகும். உலகத்தின் முடிவு பரியந்தம் இயேசு எம்மோடு எப்போதும் இருப்பதாக வாக்குப் பண்ணியிருக்கிறார் (மத்தேயு 28:20). அவரது வார்த்தையினூடாகவும் திருவருட்சாதனங்களூடாகவும் எமது கர்த்தர் தனது வாக்குத் தத்தைத் தொடர்ந்தும் நிறைவேற்றி வருகிறார்.

பீடத்தின் திருவருட்சாதனத்தை எமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து ஸ்தாபித்தார்: "இது உங்களுக்காகத் தரப்பட்ட என்னுடைய சரீரம். இந்தப் பாத்திரம் புது உடன்படிக்கைக்கான என்னுடைய ரத்தமாய் இருக்கிறது. உங்களது பாவ மன்னிப்புக்காக உங்களுக்காகச் சிந்தப்பட்டது" (மத். 26:26–29; மாற்கு 14:22–25; லூக்கா 22:14–20; 1 கொரி. 11:23–25). கர்த்தரின் பந்தி "அப்பத்திற்கும் இரசத்துக்கும் கீழ் எமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் சரீரமாயும் இரத்தமாயும் இருக்கிறது. இது கிறிஸ்தவர்கள் புசித்துக் குடிக்கும்படியாக கிறிஸ்துவினாலேதானே ஸ்தாபிக்கப்பட்டது (சிறிய வினாவிடை போதினி)

*ஆன்மா அணிசெய் உன்னை மனமகிழ்வோடு, துக்கச் சோர்வின் வழக்கத்தை நீ விட்டிடு, பகலொளி சுடரொளிக்குள் நீ வருவாய், துதியைக் களிப்புடன் அங்கே நீ கொடுப்பாய். பூசிப்பாய் கட்டில்லா கிருபை தருபவரை, இந்த அற்புத விருந்தைப் படைத்தவரை. பரலோகின் உயர்வும் பரிசுத்தமுமாய் அவர் இருந்தாலும், மிகவும் தாழ்ந்தோருடன் அவர் குடிகொள்ள அருள்பாலித்தார்.* [2]

## கர்த்தருடைய பந்தியிலே இயேசு எமக்குத் தருவது என்ன?

பீடத்தின் திருவருட்சாதனத்தில் எமது கர்த்தரும் இரட்சகருமானவர், எமக்காகச் செலுத்திய சரீரமும் இரத்தமுமான பலியை, முழு உலகினதும் பாவங்களுக்காக அவர் செலுத்திய பலியைத் தொடர்ச்சியாக எமக்கு விநியோகித்து வருகிறார். எனவே, அவரது சரீரத்தையும் இரத்தத்தையும் பெறுவதிலே நாம் மன்னிப்பையும், வாழ்வையும் இரட்சிப்பையும் பெற்றுக்கொள்கிறோம். அவரது பந்தியிலே தேவன் தரும் அவருடைய இரக்கமும் அன்பும் சமாதானமும் அன்புமான பெருஞ்சிறப்புவாய்ந்த திரவியங்களில் இருந்து வடிந்தோடுவதாக தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும் ஆற்றல் பெற்று, பிறருடன் அன்பிலும் இசைவிலும் வாழ்கிறோம்.

பழைய ஏற்பாட்டில் பலிகள் யாருக்காக பலியிடப்பட்டதோ அவர்களால் அது எப்படியாக உண்ணப்பட்டது என்பது பற்றிய கலந்துரையாடல்களிலே கர்த்தருடைய பந்தி எப்படியாக முன்நிழலிடப்பட்டுள்ளது என்பது அநேகமாக அவதானிக்கப் படுவதுண்டு (1 கொரி. 10:18). இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்பதை வேத ஆகமங்கள் சுட்டிக் காட்டுகின்றன (எபி. 9:22). தேவனுடைய மகனான இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம், சகல பாவங்களில் இருந்தும் எம்மைச் சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7; மத். 26:28; அப். நட. 20:28; ரோமர் 5:9; எபி. 9:14; எபி. 12:24; 1 பேதுரு 1:18–19; வெளி. 1:5; வெளி 7:14). இந்த அதே இரத்தத்தைத்தான் அவரது பந்தியிலே அவர் வழங்குகிறார்.

*கிட்டிச்சேர்ந்து கர்த்தருடைய சரீரத்தைப் பெற்று, உங்களுக்காக சிந்தப்பெற்ற பரிசுத்த இரத்தத்தைப் பானம் பண்ணுங்கள்; பெரியோரும் சிறியோருக்குமாக அவர் தானே தீங்கனுபவிப்பவராயும் அவரே ஆசாரியராயும் தன்னைப் பலியிட்டார்.* [3]

## தனது பரிசுத்த பந்தியிலே இயேசு எப்படியாகப் பிரசன்னமாகியிருக்கிறார்?

அப்பம் மற்றும் இரசத்தின்கீழ் இயேசு எப்படியாகப் பிரசன்னமாகியிருக்கிறார் என்பதை நாம் விளக்க முனைவதில்லை, மாறாக, அவர் பிரசன்னமாகியிருக்கிறார் என்பதை நாம் நம்பி, கற்பித்து அறிக்கையிட்டு மனமகிழ்வடைகிறோம். இயேசுவின் வார்த்தைகளை, அவற்றின் சாத்தியம் பற்றி வாதிடாமல் அல்லது அவை எப்படியாக உண்மையாக இருக்கின்றன என்பதை விளக்க முயற்சிக்காமல் அது நிலைநிற்கும்படியாக லூத்தரன்கள் விட்டுவிடுவார்கள். லூத்தர் மிகத் தெளிவாகக் கூறியிருப்பதுபோல, "பந்தியின் அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் மெய்யான சரீரமும் இரத்தமும் என்பதை நாம நிலைநிறுத்துகிறோம்" (SA III.6). ஐக்கியப்படும் அனைவருமே, அவர்கள் நம்பினாலுமென்ன நம்பாவிட்டாலுமென்ன, அவர்கள் தகுதியானவர்களாயிருந்தாலென்ன, இல்லாவிட்டாலுமென்ன, தமது வாய்களுள் இயேசுக்கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் பெற்றுக்கொள்கின்றனர்.

இயேசுவின் வார்த்தை நிச்சயமும் உறுதியுமானது. பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் வார்த்தைகளிலே நம்பித் திடன் கொள்வதற்கான விசுவாசத்தை வழங்குகிறார், "உங்களுக்காக வழங்கப்பட்டு உங்களது பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக சிந்தப்பட்டது." கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தில கொள்ளும் விசுவாசமே அவரது பந்தியைப் பெறுவதற்கு எம்மைத் தகுதிப் படுத்துகிறது. கிறிஸ்துவின் ஸ்தாபக வார்த்தைகள் அவற்றின் பொருத்தப்பாட்டையும் விளைதிறனுள்ள வல்லமையினையும் தக்கவைப்பதுடன், அதனால் இந்த வார்த்தைகளின் நிமித்தமாக, கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும் உண்மையிலேயே பிரசன்னமாகி, விநியோகிக்கப்பட்டுப் பெறப்படுகிறது.

*உமது சரீரமும் உமது இரத்தமும், ஒருக்கால் அடிக்கப் பட்டு எனக்காகச் சிந்தப்பட்டது, உமது மேசையிலே எடுக்கப்பட்டது, கர்த்தாவே அது ஒரு ஆசீர்வாதமான நிஜம். எப்படி இது இடம் பெறுகிறது என்பதை ஆராயாதீர், இந்த அற்புதமான மறைபொருள், இப்படியாகத்தான் இருக்கலாம் என நாம் நினைப்பதை விடவும் தேவன் பரந்தளவு அதிகமானதை எய்திட வல்லவர்.* [4]

## நாம் ஏன் கர்த்தரின் பந்தியை அடிக்கடி பெறுகிறோம்?

நாம் கர்த்தரின் பந்தியை அடிக்கடி பெறுகிறோம் ஏனெனில் எவ்வளவு எமக்குத் தேவை என்பதாலும் தனது பந்தியிலே தேவன் வழங்குவது என்ன என்பதாலுமே. கர்த்தருடைய பந்தியை ஒருவர் எவ்வளவு அடிக்கடியாக "பெறவேண்டும்" அல்லது

# பீடத்தின் திருவருட்சாதனம்பற்றி என்ன?

"பெற்றாகவேண்டும்" என்பதையிட்ட ஒரு விதிமுறையை நாம் வகுப்பதில்லை. ஆனால் எமது அவைகளிலே பரிசுத்த திருவிருந்து எவ்வளவு அடிக்கடி வழங்கப்படுகிறது என்பதைவிடவும் வேறான ஒரு கேள்வியாகும் இது. எமது லூத்தரன் அறிக்கைகள் கர்த்தரின் பந்தியானது ஒவ்வொரு கர்த்தரின் நாளிலும் மற்றும் ஐக்கியத்தில் பங்கெடுப்போர் பிரசன்னமாகியிருக்கும் இதர நாட்களிலும் வழங்கப்படும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது (AC XXIV.34 மற்றும் Ap.XXIV.1).

இப்படிக் கூறுவதனால், எமது அறிக்கைகள் வெறுமனே பரிசுத்த வேத ஆகமங்களின் சத்தியத்தை பிரதிபலிக்கிறது, அதுதான் கர்த்தரின் பந்தியை ஒரு பிற்சேர்க்கையாகவோ அல்லது மேலதிகமான ஒன்றாகவோ ஆக்காமல், ஆராதனையில் மத்தியமானதாக ஆக்குகிறது (அப். நட. 2:42; 20:7; 1 கொரி. 11:20,33). இந்தக் காரணத்தினாலேதான், எமது திருப் பேரவையானது ஒவ்வொரு கர்த்தரின் நாளிலும் கர்த்தரின் பந்தியைப் பெறும்படியாக வாஞ்சிக்கும் ஐக்கியங்கொள்வோர்களுக்கு அதற்கான வாய்ப்பினை வழங்கும்படியாக எமது அவைகளை மீண்டும்மீண்டுமாக் ஊக்குவித்து வந்துள்ளது.

*என் தேவனே, நீர் இங்கே என்னை உமது மகாபரிசுத்த இடத்துக்குள் என்னை நடத்தியிருக்கிறீர். இங்கே நீர் உமது கிருபையின் திரவியங்களால் என்னைப் போஷித்தீர். ஏனெனில் நீர் உலகம் என்றுமே வாங்க இயலாததை எனக்கு இலவசமாக வழங்கியிருக்கிறீர். அதுதான் பரலோகத்தில் இருந்து ஜீவன அப்பமும் நான் மரிக்கமாட்டேன் என்பதும்.* [5]

## கர்த்தரின் பந்தியைப் பெறுவதற்கான அவசியத்தை நாம் உணராவிட்டால் நாம் என்ன செய்யவேண்டும்?

எமது பாவ இயல்பின் நிமித்தமாக, "நான் திருவிருந்தைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. அதைப் பெறும்படியாக நான் உணரவும் இல்லை" என நாம் சிலவேளை சிந்திக்கத் தலைப்படுவதுண்டு. ஆனால் இப்படியாக நாம் உணரும் பட்சத்திலே, கர்த்தருடைய பந்தியிலே, அப்பம் மற்றும் இரசத்தின்கீழ், பரிசுத்த தேவாதி தேவன், ஒளியின் ஒளி, தெய்வத்தின் மெய்த்தெய்வம், எம்முடன் இருப்பதற்கும், எம்முடன் தன்னை இணைக்கும் படியாகவும், மன்னித்து, புதுப்பித்து மற்றும் எம்மை வலிவூட்டும் படியாக எமக்குள் வருகிறார் என்பதை நாம் உணர்ந்திடவேண்டும்.

கர்த்தரின் பந்தியைப் பெறும்படிக்காக நாம் ஆயத்தம் செய்யும்போது, லூத்தரன் ஆராதனை பாடல்நூலின் பக்கம் 306 இலுள்ள "கிறிஸ்தவக் கேள்விகளும் அதற்கான பதில்களும்" பற்றி மீளாய்வு செய்வது எமக்கு நல்லதாகும். அதிலே லூத்தர் 'கர்த்தருடைய பந்தியைப் பெறும்படி ஒரு "உணர்ச்சி"யை நாம் சிலவவே உணராத சாத்தியங்களைப்பற்றி லூத்தர் பேசுகிறார். லூத்தர் எழுதுவது, "அப்படியான ஒரு நபருக்கு, முதலாவதாக அவர் தனது கையைத் தனது சட்டைக்குள் விட்டு, தனக்கு இன்னமும் மாமிசமும் இரத்தமும் உள்ளதா என்பதை உணரவும் மற்றும் அனைத்து வழிமுறைகளாலும் அதைப்பற்றி வேதாகமம் கலாத்தியர் 5 மற்றும் ரோமர் 7 இலே கூறுவதை நம்பவும் வேண்டுவதேயன்றி, வேறு எந்த சிறந்த ஆலோசனையும் வழங்கிட இயலாது.

"இரண்டாவதாக, அவன் சுற்றும் முற்றும் பார்த்து அவன் உலகிலேயே இன்னமும் இருக்கிறானா என்பதைக் கண்டுகொண்டு, யோவான் 15 – 16 மற்றும் 1 யோவான் 2 மற்றும் 5 ஆகிய பகுதிகளிலே வேதம் கூறுகிறபடியாக, பாவத்திலும் துன்பதுயரிலும் குறைவு ஏற்படுவதென்பது எப்போதுமே நிகழாது என்பதையும் மனதில் இருத்தவேண்டும்.

"மூன்றாவதாக, அவனைச் சூழ்ந்து நிச்சயமாக பிசாசு இருப்பான். அவன் இரவும் பகலும் தனது பொய்பேசும் மற்றும் கொலைசெய்யும் தன்மையால் வேதாகமம் யோவான் 8, மற்றும் 16; 1 பேதுரு 5; எபேசியர் 6, 2 தீமோ. 2 ஆகிய பகுதிகளூடாகச் சித்தரித்துள்ளபடியாக, உள்ளுக்குள்ளும் வெளியேயும் சமாதானம் பெறும்படிக்கு அவனை அனுமதிக்கமாட்டான்."

*ஓ இயேசுவே, பரிசுத்தமான கர்த்தரே, எனது துதியும் எனது இதயங்கனிந்த நன்றியும் உமக்கே நான் ஏறெடுக்கிறேன். மிகவும் அன்பாக நீர் உமது சரீரத்தையும் உமது உதிரத்தையும் என்மீது தந்திருக்கிறீ. என் ஆத்துமாவே நீ களிப்புடன் பீறிட்டுக் கூறுவாயாக: என்னே ஒரு செல்வச்செழிப்பு இன்று என்னிடம் வந்தது, உடலுக்கும், மனதுக்கும் ஆன்மாவுக்கும் என்னே ஆரோக்கியம்! கிறிஸ்து எனக்குள் வாசம்பண்ணி என்னை முழுமையாக்குகிறார்.* [6]

## முடிவாக

"வனாந்தரத்திலே இஸ்ரவேலர்கள் வானத்தில் இருந்து அப்பம் போல மன்னாவினாலே போஷிக்கப்பட்டார்கள் (யாத். 16:15). இந்தப் பரிசுத்த பந்தியிலோ உலகுக்கு ஜீவனை வழங்கும்படியாக வானத்தில் இருந்து கீழே வந்த மெய்யான மன்னாவை நாம் பெறுகிறோம். கர்த்தரின் பந்தியின் பெறுமதிமிக்க திரவியத்தை ஒரு லூத்தரன் இறையியலாளர் அழகாக விபரிக்கிறது எப்படியென்றால்:

இதே பரலோகத்தின் அப்பம், தேவதூதர்களின் உணவு, அதனை அருந்தும் எந்த ஒரு மனிதனும் எப்போதும் பசியாக இருக்கமாட்டான் (யோவான் 6:35,51).

"இஸ்ரவேல் புத்திரர் உடன்படிக்கையின் பேழையையும் கிருபாசனமும் கொண்டிருந்தார்கள். அதன்மூலம் அவர்கள் கர்த்தர் அவர்களுடன் நேரடியாக முகமுகமாகப் பேசுவதைக் கேட்கக்கூடியதாக இருந்தது (யாத். 25:21,22). இங்கோ மெய்யான உடன்படிக்கையின் பேழை, கிறிஸ்துவின் மகா பரிசுத்தமான சரீரம், அவரிலேயே சகல ஞானத்தினதும் அறிவினதும் திரவியங்கள் மறைந்து கிடக்கின்றன (கொலோசே 2;3). கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற இரத்தத்திலே இங்கே எமக்கு மெய்யான கிருபாசனம் உள்ளது (ரோமர் 3:25). அதன்மூலம் தேவன் தனது நேசரிலே எம்மையும் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவர்களாக ஆக்கினார். (எபேசியர் 1:6).

"கிறிஸ்து எமது உள்ளத்துக்குள் எமது ஆன்மாக்களுக்கான ஆறுதலின் வார்த்தையைப் பேசுவது மட்டுமல்லாமல், அவர் எமக்குள் தனது இருப்பிடத்தையும் எடுத்துக்கொள்கிறார். எமது ஆன்மாக்களை பரலோக மன்னாவினால் போஷிககவில்லை, மாறாக அதைவிட எவ்வளவோ மேலான, அவரது சொந்த ஆசீர்வதிக்கபட்ட அவரது சுயத்தால் போஷிக்கிறார். எமது ஆன்மாக்களுக்கான மெய்யான வாசல் இதுதான், அத்துடன் தேவனுடைய தேவதூதர்கள் பரலோகத்துக்கு ஏறுவதும் இறங்குவதுமாய் பூமிக்கும் வானத்துக்கும் இடையே இருந்த ஏணியும் இதுதான் (ஆதி. 28:12).

"கிறிஸ்து எம்மை அருமையாகப் பற்றிக்கொள்கிறார், ஏனெனில் அவர் எம்மை அருமையாக கிரயம் கொடுத்து வாங்கினார். மிகவும் அருமையானதும் பெறுமதியானதுமான உணவினால் எமது ஆத்துமாக்களைப் போஷிக்கிறபடியால் அவர் எம்மை அருமையாகப் பற்றிப்பிடிக்கிறார். நாம் அவரது பரிசுத்த உடலின், அவரது சரீரத்தன் அங்கத்தவர்களாக இருப்பதால், அவர் எம்மை அருமையாகப் பற்றிக்கொள்கிறார் (எபேசியர் 5:30).

"தேவனுடைய பரிசுத்த மாம்சம், தேவதூத சேனைகள் ஒன்றித்த தெய்வீக ஐக்கியத்திலே தொழுதிடும் அது, அதன்முன்பாகப் பிரதான தேவதூதர்கள் வணக்கத்துடன் பணிந்து குனியும் அது, அதற்குமுன்பாகப் பரலோகத்தின் வல்லாதிக்கங்களும் துரைத்தனங்களும் பயந்து நடுநடுங்கும் அது, எமது ஆன்மாக்களுக்கான ஊட்டமாக ஆகிவிடுகிறது. வானங்கள் மனமகிழட்டும், பூமி மகிழட்டும் (சங். 96:11), ஆனாலும் அதைவிடவும் அதிகமாக, விசுவாசிக்கும் ஆன்மா ஆர்ப்பரித்து களிப்புடன் பாடட்டும், தேவன் அதற்குச் சொல்லத்தகாத கொடையை வழங்குகிறாரே!" [7]

*ஓ கர்த்தாவே நாம் உம்மைத் துதிக்கிறோம், ஆராதிக்கிறோம் வணங்குகிறோம் நன்றியுடன் உம்முன்பதாகச் சிரம் தாழ்த்திப் பணிகிறோம். இங்கே உமது சரீரத்தாலும் உமது இரத்தத்தாலும் எமது பலவினமான ஆன்மா செழிக்கும்படிக்காக அதனைப் போஷிக்கின்றீர். ஓ கர்த்தாவே, இரங்கும்!* [8]

1 பாடல் 220, LW.
2 பாடல் 239, LW.
3 பாடல் 240, LW.
4 பாடல் 249, LW.
5 பாடல் 244, LW.
6 பாடல் 245, LW.
7 ஜோன் ஜெர்ஹார்ட் John Gerhard, பரிசுத்த தியானங்கள்S acred Meditations பக். 103 தொடக்கம்
8 பாடல் 238, LW.

கலாநிதி A.L. பர்றி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை